**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>**
**<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>**
**<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>**
**<u>MCOP No.424/2024</u>**

ம.சா. 2 தேதி. 02.07.2026

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கர் | த/பெ, | சீனிவாசன் |
| வயது | 20 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–**

நான் டிப்ளமோ முடித்து தேசிய நெடுஞ்சாலைத்துறையில் பணியாற்றி வருகிறேன். தேசிய நெடுஞ்சாலையில் பொதுவாக இரண்டு வழி பாதை இருக்கும், இரண்டு பாதைக்கும் நடுவே டிவைடர் உள்ளது என்றால் சரிதான். அதனால் சாலையில் எதிர் எதிரே இரண்டு வாகனங்கள் வருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றால் சரிதான். அதனால் காளிதாஸ் சென்ற இருசக்கர வாகனத்திற்கு எதிரே வந்த லாரி மோதுவதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். லாரி வரக்கூடிய பாதையில் எதிர் திசையில் நானும் செல்வதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். ஆனால் லாரி எதிர்திசையில் வந்தது. சாலை தெற்கு வடக்கு ரோடு என்றால் சரிதான். நான் சீர்காழியிலிருந்து சிதம்பரம் செல்வதற்கு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றேன். வடக்கேயிருந்து தெற்கு வருவதற்கு தனி சாலை உள்ளது. அவ்வாறு இருக்கும்போது லாரி எதிர்திசையில் வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்சரியல்ல,. காவல் நிலையத்தில் நான் புகார் அளிக்கவில்லை. போலீசார் என்னிடம் விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை.

உண்மையில் சம்பவத்தை நான் பார்த்திருந்தால் போலீசார் என்னை சம்பவ சாட்சியாக விசாரணை செய்திருப்பார்கள் என்றால் சரிதான். என்னை போலீசார் விசாரிக்காததற்கு காரணம் நான் சம்பவத்தை நேரில் பார்க்காதது தான்காரணம் என்றால் சரியல்ல. எனது விசாரணை வாக்குமூலத்தில் ஆணைக்காரன் சத்திரம் போலீசார்

என்னை விசாரித்ததாக நான் கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான், விபத்தில் இறந்த நபர் காவலர் என்பதாலும் அவர் எனது உறவினர் என்பதாலும் அவரது குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடு கிடைக்க வேண்டும் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.